# வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - 2019

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் பதவியில் நிலவும் **அட்டவணை I** இல் காட்டப்பட்ட 54 பதவி வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் கோரப்படுகின்றன. இவ் விளம்பரத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 04.10.2019 ஆகும்.

## 2. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :

2.1 2019.08.26ஆம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள வட மாகாண திணைக்கள சேவையில் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் **G/NPC/A9/Agri/Approval/2019**ம் இலக்க 12.09.2019ம் திகதிய கடிதம் மூலமான அனுமதிக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** வகுதிக்குட்பட்ட விளம்பரத்தின் **அட்டவணை I** இல் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளிற்கு நியமிக்கப்படுவர். பதவிகளின் விபரம் **அட்டவணை I** இல் காட்டப்பட்டுள்ளது.

2.2 நேர்முகப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் பரீட்சார்த்திகளால் விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளின் **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று** (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

2.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். ஆதலால் இந்நியமனம் பெறுபவா்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

2.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், குறித்த சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக **ஐந்து** (05) வருடங்கள் கட்டாய சேவையாற்றுதல் வேண்டும்.

2.5 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும் நியமனத் திகதியிலிருந்து **ஐந்து** (05) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில

வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

2.7 **(அட்டவணை I)** மாவட்டரீதியில் விவசாயத் திணைக்களத்தில் காணப்படும் பதவி வெற்றிடங்களது விபரங்கள்

| திணைக்களம் | பதவி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாயத் திணைக்களம் | நீர்ப்பம்பி இயக்குனர் | - | ✓ | - | ✓ | - | 02 |
| | திணைக்களத் தொழிலாளி | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 52 |
| மொத்தம் | | | | | | | 54 |

2.8 அட்டவணை I இல் காட்டப்பட்ட பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்களது விபரங்கள்

**நீர்ப்பம்பி இயக்குனர் பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

- நீர்ப்பம்பி மற்றும் இயந்திரசாதனங்களை இயக்குதலும் பேணுதலும்
- நுண்நீர்ப்பாசனத்தொகுதிகளைப் பொருத்துதலும் பேணுதலும்
- இயந்திரங்களில் ஏற்படும் சிறிய திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்

**திணைக்களத் தொழிலாளி பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

- விவசாயப் பண்ணை மற்றும் பயிற்சி நிலையங்களில் பயிர்செய்கை நடவடிக்கைகளான தரை பண்படுத்தல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், பசளை இடுதல், பீடை நாசினிகளை விசிறுதல்
- உரிய காலத்தில் விவசாய உற்பத்திகளை அறுவடை செய்தல் துப்புரவு செய்தல், தரம் பிரித்தல், விற்பனைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
- விவசாயக் கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இயக்கி பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அவற்றினைப் பராமரித்தலும்
- நாற்று மேடைகளை அமைத்தல் மற்றும் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்தல்
- விவசாயக்கண்காட்சி, நடமாடும் சேவை, விவசாய பயிற்சி வகுப்புகள் போன்ற நிகழ்வுகளுக் குரிய களவேலைகளை மேற்கொள்ளுதல்
- வாகனங்களில் விவசாய உள்ளீடுகளை ஏற்றி இறக்குதல்
- பண்ணைச் சுற்றாடலைத் துப்புரவு செய்தலும் அழகுபடுத்தலும்
- பழ மரங்கள் மற்றும் அலங்காரத் தாவரங்களைக் கத்தரித்தலும் பராமரித்தலும்
- காளான் உற்பத்தி, தேனீ வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணை போன்ற விசேட நடவடிக் கைகளை மேற்கொள்ளல்

**3. சம்பளக் குறியீடும் சம்பள அளவுத்திட்டமும்** :

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 க்கு அமைவான, சம்பளக் குறியீடு PL 1 – 2016 க்கு ஏற்ப திணைக்களச் சேவைக்குரிய ஆரம்பமட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் தரம் - III இற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **24, 250 – 10 x 250 - 10 x 270 - 10 x 300 – 12 x 330 – 36, 410/-** ஆகும். (ரூபா **25,000** என்ற சம்பளப் படிநிலைக்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை – II** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**4. பொதுவான தகைமைகள் :**

4.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4.3. விண்ணப்பதாரர் வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தி கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் அல்லது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).**

4.4. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

## 5. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :

5.1 கல்வித் தகைமைகள் :

தரம் 8 அல்லது ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

5.2 **அனுபவம் :**

உரிய பதவிகளுக்கான அனுபவம் மேலதிக தகமையாகக் கொள்ளப்படும்

5.3 **வயதெல்லை :**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **பதினெட்டு வயதிற்கு (18)** குறையாதவராகவும், **நாற்பத்தைந்து வயதிற்கு (45)** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 6. ஆட்சேர்ப்பு முறை :

6.1 பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு நடைபெறும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது மாவட்ட அடிப்படையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைப்படி மாவட்ட வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும். ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக திணைக்கள சேவைக்குரிய **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர்** தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பொது நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். பொது நேர்முகப் பரீட்சையின் போது கோரப்பட்ட சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

6.2 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத் திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். விண்ணப்பதாரி நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய விண்ணப்பதாரி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு தேவைப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

## 7. விண்ணப்பிக்கும் முறை :

7.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **04.10.2019** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, 393/48, கோவில் வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு :** விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பின் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்" **வடக்கு மாகாண, விவசாயத் திணைக்கள சேவையின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், (……………மாவட்டம்………) (………………பதவிக்குரிய பெயர்…………) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் - 2019"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

7.4 நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடின், கீழ்வரும் குறிப்பிலுள்ள விபரங்களுடன் **"செயலாளர், விவசாய அமைச்சு, வடமாகாணம், இல.655, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - 021-2217306, தொலைநகல் இல - 021-2217304)

**குறிப்பு** : கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதி, மற்றும் பதிவுத் தபால் பற்றுச் சீட்டு.

7.5 இப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்பட மாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்பட மாட்டாது.

8. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 447,240.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

10. இந்நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் **நியமன அதிகாரியாகிய வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கே** உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

11. இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை வடக்கு மாகாணசபையின் www.np.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

**அ.சிவபாலசுந்தரன்**
செயலாளர்
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்
14.09.2019

# வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - 2019

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் பதவியில் நிலவும் **அட்டவணை I** இல் காட்டப்பட்ட 54 பதவி வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் கோரப்படுகின்றன. இவ் விளம்பரத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 04.10.2019 ஆகும்.

## 2. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :

2.1 2019.08.26ஆம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள வட மாகாண திணைக்கள சேவையில் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் **G/NPC/A9/Agri/Approval/2019**ம் இலக்க 12.09.2019ம் திகதிய கடிதம் மூலமான அனுமதிக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** வகுதிக்குட்பட்ட விளம்பரத்தின் **அட்டவணை I** இல் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளிற்கு நியமிக்கப்படுவர். பதவிகளின் விபரம் **அட்டவணை I** இல் காட்டப்பட்டுள்ளது.

2.2 நேர்முகப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் பரீட்சார்த்திகளால் விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளின் **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று** (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

2.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். ஆதலால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

2.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், குறித்த சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக **ஐந்து** (05) வருடங்கள் கட்டாய சேவையாற்றுதல் வேண்டும்.

2.5 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும் நியமனத் திகதியிலிருந்து **ஐந்து** (05) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில

வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

2.7 (**அட்டவணை I**) மாவட்டரீதியில் விவசாயத் திணைக்களத்தில் காணப்படும் பதவி வெற்றிடங்களது விபரங்கள்

| திணைக்களம் | பதவி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாயத் திணைக்களம் | நீர்ப்பம்பி இயக்குனர் | - | ✓ | - | ✓ | - | 02 |
| | திணைக்களத் தொழிலாளி | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 52 |
| மொத்தம் | | | | | | | 54 |

2.8 அட்டவணை I இல் காட்டப்பட்ட பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்களது விபரங்கள்

**நீர்ப்பம்பி இயக்குனர் பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

- நீர்ப்பம்பி மற்றும் இயந்திரசாதனங்களை இயக்குதலும் பேணுதலும்
- நுண்நீர்ப்பாசனத்தொகுதிகளைப் பொருத்துதலும் பேணுதலும்
- இயந்திரங்களில் ஏற்படும் சிறிய திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்

**திணைக்களத் தொழிலாளி பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

- விவசாயப் பண்ணை மற்றும் பயிற்சி நிலையங்களில் பயிர்செய்கை நடவடிக்கைகளான தரை பண்படுத்தல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், பசளை இடுதல், பீடை நாசினிகளை விசிறுதல்
- உரிய காலத்தில் விவசாய உற்பத்திகளை அறுவடை செய்தல் துப்புரவு செய்தல், தரம் பிரித்தல், விற்பனைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
- விவசாயக் கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இயக்கி பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அவற்றினைப் பராமரித்தலும்
- நாற்று மேடைகளை அமைத்தல் மற்றும் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்தல்
- விவசாயக்கண்காட்சி, நடமாடும் சேவை, விவசாய பயிற்சி வகுப்புகள் போன்ற நிகழ்வுகளுக் குரிய களவேலைகளை மேற்கொள்ளுதல்
- வாகனங்களில் விவசாய உள்ளீடுகளை ஏற்றி இறக்குதல்
- பண்ணைச் சுற்றாடலைத் துப்புரவு செய்தலும் அழகுபடுத்தலும்
- பழ மரங்கள் மற்றும் அலங்காரத் தாவரங்களைக் கத்தரித்தலும் பராமரித்தலும்
- காளான் உற்பத்தி, தேனீ வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணை போன்ற விசேட நடவடிக் கைகளை மேற்கொள்ளல்

## 3. சம்பளக் குறியீடும் சம்பள அளவுத்திட்டமும் :

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 க்கு அமைவான, சம்பளக் குறியீடு PL 1 – 2016 க்கு ஏற்ப திணைக்களச் சேவைக்குரிய ஆரம்பமட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் தரம் - III இற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **24, 250 – 10 x 250 - 10 x 270 - 10 x 300 – 12 x 330 – 36, 410/-** ஆகும். (ரூபா **25,000** என்ற சம்பளப் படிநிலைக்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை – II** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

## 4. பொதுவான தகைமைகள் :

4.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4.3. விண்ணப்பதாரர் வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தி கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் அல்லது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).**

4.4. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

## 5. கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :

5.1 கல்வித் தகைமைகள் :

தரம் 8 அல்லது ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

5.2 **அனுபவம் :**

உரிய பதவிகளுக்கான அனுபவம் மேலதிக தகமையாகக் கொள்ளப்படும்

5.3 **வயதெல்லை :**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **பதினெட்டு வயதிற்கு (18)** குறையாதவராகவும், **நாற்பத்தைந்து வயதிற்கு (45)** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 6. ஆட்சேர்ப்பு முறை :

6.1 பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு நடைபெறும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது மாவட்ட அடிப்படையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைப்படி மாவட்ட வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும். ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக திணைக்கள சேவைக்குரிய **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர்** தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பொது நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். பொது நேர்முகப் பரீட்சையின் போது கோரப்பட்ட சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

6.2 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத் திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். விண்ணப்பதாரி நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய விண்ணப்பதாரி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு தேவைப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

## 7. விண்ணப்பிக்கும் முறை :

7.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **04.10.2019** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, 393/48, கோவில் வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு** : விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பின் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்" **வடக்கு மாகாண, விவசாயத் திணைக்கள சேவையின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், (………மாவட்டம்………) (………பதவிக்குரிய பெயர்………) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் - 2019"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

7.4 நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடின், கீழ்வரும் குறிப்பிலுள்ள விபரங்களுடன் **"செயலாளர், விவசாய அமைச்சு, வடமாகாணம், இல.655, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - 021-2217306, தொலைநகல் இல - 021-2217304)

**குறிப்பு** : கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதி, மற்றும் பதிவுத் தபால் பற்றுச் சீட்டு.

7.5 இப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்பட மாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்பட மாட்டாது.

8. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 447,240.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

10. இந்நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் **நியமன அதிகாரியாகிய வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கே** உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

11. இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை வடக்கு மாகாணசபையின் www.np.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

**அ.சிவபாலசுந்தரன்**
செயலாளர்
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்
14.09.2019

# வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரல் - 2019

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் பதவியில் நிலவும் **அட்டவணை I** இல் காட்டப்பட்ட 54 பதவி வெற்றிடங்களுக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் கோரப்படுகின்றன. இவ் விளம்பரத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 04.10.2019 ஆகும்.

## 2. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :

2.1 2019.08.26ஆம் திகதியிலிருந்து செயல்வலுவிலுள்ள வட மாகாண திணைக்கள சேவையில் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் **G/NPC/A9/Agri/Approval/2019**ம் இலக்க 12.09.2019ம் திகதிய கடிதம் மூலமான அனுமதிக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30 ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் மற்றும் எதிர்காலத்தில் இவற்றில் மேற்கொள்ளப்படும் ஏதேனும் திருத்தங்களிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** வகுதிக்குட்பட்ட விளம்பரத்தின் **அட்டவணை I** இல் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளிற்கு நியமிக்கப்படுவர். பதவிகளின் விபரம் **அட்டவணை I** இல் காட்டப்பட்டுள்ளது.

2.2 நேர்முகப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களிற்கு தகுதிகாண்கால அடிப்படையில் பரீட்சார்த்திகளால் விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளின் **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், தரம் III** பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து **மூன்று** (03) வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

2.3 இச்சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். ஆதலால் இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

2.4 ஒரு சேவை நிலையத்தில் நியமனம் பெறுபவர், குறித்த சேவை நிலையத்தில் தொடர்ச்சியாக **ஐந்து** (05) வருடங்கள் கட்டாய சேவையாற்றுதல் வேண்டும்.

2.5 பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமையவும் நியமனத் திகதியிலிருந்து **ஐந்து** (05) வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

2.6 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். எனினும் அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில

வெற்றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

2.7 **(அட்டவணை I)** மாவட்டரீதியில் விவசாயத் திணைக்களத்தில் காணப்படும் பதவி வெற்றிடங்களது விபரங்கள்

| திணைக்களம் | பதவி | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | மன்னார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாயத் திணைக்களம் | நீர்ப்பம்பி இயக்குனர் | - | ✓ | - | ✓ | - | 02 |
| | திணைக்களத் தொழிலாளி | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | 52 |
| மொத்தம் | | | | | | | 54 |

2.8 அட்டவணை I இல் காட்டப்பட்ட பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்களது விபரங்கள்

**நீர்ப்பம்பி இயக்குனர் பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

- நீர்ப்பம்பி மற்றும் இயந்திரசாதனங்களை இயக்குதலும் பேணுதலும்
- நுண்நீர்ப்பாசனத்தொகுதிகளைப் பொருத்துதலும் பேணுதலும்
- இயந்திரங்களில் ஏற்படும் சிறிய திருத்த வேலைகளை மேற்கொள்ளுதல்

**திணைக்களத் தொழிலாளி பதவிகளுக்குரிய கடமைப் பொறுப்புக்கள்**

- விவசாயப் பண்ணை மற்றும் பயிற்சி நிலையங்களில் பயிர்செய்கை நடவடிக்கைகளான தரை பண்படுத்தல், களை பிடுங்குதல், நீர் பாய்ச்சுதல், பசளை இடுதல், பீடை நாசினிகளை விசிறுதல்
- உரிய காலத்தில் விவசாய உற்பத்திகளை அறுவடை செய்தல் துப்புரவு செய்தல், தரம் பிரித்தல், விற்பனைக்கு கொண்டு செல்லுதல் மற்றும் களஞ்சியப்படுத்தல்
- விவசாயக் கருவிகள், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களை இயக்கி பண்ணை நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் அவற்றினைப் பராமரித்தலும்
- நாற்று மேடைகளை அமைத்தல் மற்றும் தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்தல்
- விவசாயக்கண்காட்சி, நடமாடும் சேவை, விவசாய பயிற்சி வகுப்புகள் போன்ற நிகழ்வுகளுக் குரிய களவேலைகளை மேற்கொள்ளுதல்
- வாகனங்களில் விவசாய உள்ளீடுகளை ஏற்றி இறக்குதல்
- பண்ணைச் சுற்றாடலைத் துப்புரவு செய்தலும் அழகுபடுத்தலும்
- பழ மரங்கள் மற்றும் அலங்காரத் தாவரங்களைக் கத்தரித்தலும் பராமரித்தலும்
- காளான் உற்பத்தி, தேனீ வளர்ப்பு, ஒருங்கிணைந்த பண்ணை போன்ற விசேட நடவடிக் கைகளை மேற்கொள்ளல்

**3. சம்பளக் குறியீடும் சம்பள அளவுத்திட்டமும்** :

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 03/2016 க்கு அமைவான, சம்பளக் குறியீடு PL 1 – 2016 க்கு ஏற்ப திணைக்களச் சேவைக்குரிய ஆரம்பமட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர் தரம் - III இற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **24, 250 – 10 x 250 - 10 x 270 - 10 x 300 – 12 x 330 – 36, 410/-** ஆகும். (ரூபா **25,000** என்ற சம்பளப் படிநிலைக்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல் வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் **அட்டவணை – II** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**4. பொதுவான தகைமைகள் :**

4.1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

4.2. விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

4.3. விண்ணப்பதாரர் வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும் **(நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்த பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தி கிராம சேவையாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் அல்லது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்).**

4.4. விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** விண்ணப்பதாரி கொண்டிருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் :**

5.1 கல்வித் தகைமைகள் :

தரம் 8 அல்லது ஆண்டு 9 இல் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

5.2 **அனுபவம் :**

உரிய பதவிகளுக்கான அனுபவம் மேலதிக தகமையாகக் கொள்ளப்படும்

5.3 **வயதெல்லை :**

விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரி **பதினெட்டு வயதிற்கு (18)** குறையாதவராகவும், **நாற்பத்தைந்து வயதிற்கு (45)** மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்ப்பு முறை :**

6.1 பொது நேர்முகப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு நடைபெறும். கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் போது மாவட்ட அடிப்படையில் அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமைப்படி மாவட்ட வெற்றிடங்களுக்கு ஏற்ப நியமனம் வழங்கப்படும். ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாக திணைக்கள சேவைக்குரிய **ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர்** தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் விண்ணப்பதாரர்களிடம் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பொது நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரியவந்தால் இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். பொது நேர்முகப் பரீட்சையின் போது கோரப்பட்ட சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

6.2 வெற்றிடத்தின் 03% விசேட தேவையுடையோருக்காக (மாற்றுத் திறனாளிகளுக்காக) ஒதுக்கப்படும். விண்ணப்பதாரி நியமனத்திற்காக தெரிவு செய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது விசேட தேவையுடைய தன்மையானது (Disability) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை அறிக்கை மூலம் நிரூபித்தல் வேண்டும். எனினும் விசேட தேவையுடைய விண்ணப்பதாரி ஒருவர் நியமனத்திற்காக தகைமை பெறுவது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு தேவைப்படும் புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையிலாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும், 11 முதல் 14 வரையான பந்திகள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **04.10.2019** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, 393/48, கோவில் வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**குறிப்பு** : விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பின் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

7.2 விண்ணப்பப் படிவம் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்" **வடக்கு மாகாண, விவசாயத் திணைக்கள சேவையின் ஆரம்ப மட்ட (தேர்ச்சியற்ற) தொழிலாளர், (..........மாவட்டம்..........) (..........பதவிக்குரிய பெயர்..........) தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம் - 2019"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னராகக் கிடைக்கின்ற விண்ணப்பங்களும், உரிய தகவல்களைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7.3 விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். **நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் அனுப்பி வைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.**

7.4 நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாவிடின், கீழ்வரும் குறிப்பிலுள்ள விபரங்களுடன் **"செயலாளர், விவசாய அமைச்சு, வடமாகாணம், இல.655, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தொலைபேசி இல - 021-2217306, தொலைநகல் இல - 021-2217304)

**குறிப்பு** : கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் புகைப்படப் பிரதி, மற்றும் பதிவுத் தபால் பற்றுச் சீட்டு.

7.5 இப் பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களினது விண்ணப்பப் படிவங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவித்தல் எவையும் வழங்கப்பட மாட்டாது. மேலும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் கோரப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் ஏதுமின்றி நிராகரிக்கப்படலாம் என்பதுடன் இவை தொடர்பான அறிவித்தல் எவையும் வழங்கப்பட மாட்டாது.

8. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக் கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

9. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானதாகும். ஒரு அரச நிறுவனத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது நிறுவனத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் மூலமாக உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரிகள் அப்பகுதியின் கிராம சேவையாளர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண அதிகாரி, சட்டத்தரணி, நொத்தாரிசு, கடற்படை, தரைப்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற உத்தியோகத்தர், ரூபா 447,240.00 க்குக் குறையாத தொகையை வருடாந்த திரட்டுச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க அல்லது உள்ளூராட்சி அல்லது மாகாண உத்தியோகத்தர், மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

10. இந்நேர்முகப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் **நியமன அதிகாரியாகிய வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கே** உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

11. இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவங்களை வடக்கு மாகாணசபையின் www.np.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.

**அ.சிவபாலசுந்தரன்**
செயலாளர்
மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்
14.09.2019